**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.623/2018**

**Prosecution Witness : 5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாண்டியராஜன் | **Caste** | : |
| **Father's Name** | : செல்லையா | **Calling** | : டி.வி.மெக்கானிக் |
| **Village** | : எருமைக்காரத்தெரு | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 64/2026 |
| | | **Dated** | : 09.02.2026 |

**09.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–9 **திரு. பாண்டியராஜன்**ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 5** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி இறப்பு**

**<u>முதல் விசாரணை</u>**

நான் திண்டுக்கல் எருமைக்காரத்தெருவில் குடியிருந்து டி.வி.மெக்கானிக் வேலை செய்துவருகிறேன். கடந்த 2018ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை நானும் எனது நண்பர் குணசேகரனும் திருச்சி ரோட்டில் காலை 08.00 மணியளவில் ரயில்வே பாலத்திற்கு அருகே சென்றபோது போலிசார் ஒரு குற்றவாளியை பிடித்து விசாரித்ததாகவும் அதற்கு சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றார்கள்.

என்னிடம் காட்டப்படும் 11.10.2018ம் தேதி 08.00 மணிக்கு எதிரி விஜய், ஜெயசீலன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2வது சாட்சியாக கையொப்பம் செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 11.10.2018ம் தேதி 09.15 மணிக்கு எதிரி ஆஜர் செய்த இருசக்கர வாகனத்திற்கான அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது. அன்றைய தினம் 10.30 மணிக்கு எதிரி வீட்டின் முன்பு தயார்செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது. **09.15 மணிக்கு தயார்செய்யப்பட்ட அத்தாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ.5 ஆகவும் 10.30 மணிக்கு தயார்செய்யப்பட்ட அத்தாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 11.10.2018ம் தேதி காலை 08.00 மணிக்கு திண்டுக்கல் திருச்சி ரோடு ரயில்வே மேம்பாலம் அருகே போலிசார் எதிரியை நிறுத்தி எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதனடிப்படையில் அவ்விடத்திலேயே எதிரியிடம் இருந்து இருசக்கர வாகனத்தை கைப்பற்றியும் மேலும் எதிரியுடன் அவரது வீட்டிற்கு சென்று எதிரி ஆஜர்செய்த கருப்பு கலர் சாம்சங் போன் ஒன்றை அத்தாட்சியில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள் என போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்சமயம் நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரி.

**<u>மறு விசாரணை</u>**
இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.02.09 10:13:06 +0530

Judicial Magistrate No.II
Dindigul.